# Reminiscences of our Founder



1930 – என் வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்ட ஆண்டு.

"காந்தியடிகள் என்ன செய்யச் சொல்லுகிறாரோ அதை விட வேறு சிறந்த வேலை இருக்க முடியாது. காந்தியடிகளை விட மேலான தலைவர் யாரும் இல்லை. அவர் தலைமையில் நடைபெற்ற சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டு வேலை செய்வதற்காகவே இந்தப் பிறவியை கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிறார்" – இந்த எண்ணம் எனக்கு எப்படி ஏற்பட்டது, யாரால் ஏற்பட்டது என்பது இன்றளவும் எனக்கு விளங்காத ஒன்று. இந்த எண்ணம் வளர வளர வீடு, குடும்பம் என்ற நினைவு குறைந்து, ஒத்த எண்ணமுள்ள அன்பர்களைச் சந்திப்பதில், அவர்களுடன் சேர்ந்து வேலை செய்வதில் ஒரு தனிமகிழ்ச்சி ஏற்பட்டது. முடிவு இத்தகைய தேசீய எண்ணமுள்ள நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு மத்தியில் திருச்சியில் ஓராண்டு சிறைவாசம்!

அந்தச் சிறை வாசத்தில் பழகிய தோழர்களில் ஒருவர்தான் ஸ்ரீ ரா.குருசாமி அவர்கள்.

1934-ம் ஆண்டு காந்தியடிகள் தமிழ் நாட்டிற்கு ஹரிஜன இயக்கம் சம்பந்தமாக சுற்றுப் பிரயாணம் வந்திருந்த பொழுது ஒரு நாள் முழுவதும் காந்தியடிகளுடன் இருந்து தரிசிக்கவும் அவர்களுடைய ஆசி பெறவும் பாக்கியம் கிடைத்தது. மூன்று ஆண்டுகள் நான் பிறந்த ஊரில் ஆரம்பப் பள்ளி ஆசிரியனாக வேலை செய்தேன். அது சமயம் அந்த கிராமத்திலும் சுற்றிலுமுள்ள கிராமங்களிலும் என்னுடன் வேலை செய்த ஆசிரியர்களுடைய துணை கொண்டும், வயது வந்த மாணவர்களுடைய உதவி கொண்டும், ஓரளவு நிர்மாண வேலைகள் செய்து வந்தேன். அன்று என்னுடன் ஒத்துழைத்த பள்ளி ஆசிரியர்களில் ஒருவர்தான் இன்று இந்த ஆசிரமத்தில் இருந்துவரும் ஸ்ரீ தவசி நாயுடு. அது சமயம் ஸ்ரீ க.அ.அவர்கள் அடிக்கடி வருவார். ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் அவர் சிரசாசனம் கற்றுக் கொடுத்ததும், மற்ற வேலைகளில் கலந்து கொண்டதும் நினைவுக்கு வருகிறது.

பள்ளிகள் தேசீயத்தை வளர்க்கும் ஸ்தாபனங்களாக மாறுவதை பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பவில்லை. என்னுடைய வேலை காரணமாக பள்ளிக்கு அரசாங்க உதவி கிடைப்பது தடைப்படக்கூடுமென்று தெரிந்ததால் பள்ளியை விட்டு விலக நேர்ந்தது. சில வாரங்களுக்குப் பின்னால் மதுரை ஜில்லா போர்டுக்கு ஒருஅங்கத்திதனனாக போட்டியில்லாமல் கல்லுப்பட்டி வட்டாரத்திலுள்ள கிராமங்களால் தேர்ந்தெடுக்கப்பெற்றேன். பின்னர் போர்டு உப தலைவனாகவும் தேர்ந்தெடுக்கப்பெற்று மதுரை ஜில்லாவிலுள்ள ஆரம்பப் பள்ளிகளின் நிர்வாகம் என்னிடம் ஒப்புவிக்கப் பெற்றது. இது 1937-ம் ஆண்டு, ஜில்லா போர்டிலிருந்து வேலை செய்து வந்த போதிலும் தேசீயத்தை வளர்ப்பதற்கு, நிர்மாண வேலை செய்வதற்கு, மனமொத்த ஊழியர்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு பிள்ளைகளுக்கப் பயிற்சி கொடுப்பதற்குரிய ஒரு ஸ்தாபனம் ஏற்பட வேண்டுமென்ற அந்த ஆசையும் என்னுள் வளர்ந்து வந்தது. ஸ்தாபனத்தை எங்கே அமைப்பது? எந்தெந்த ஊர்கள் நான் ஒரு சிரமமுமில்லாமல் ஜில்லா போர்டிலிருந்து அதிக அளவு சேவை செய்வதற்கு உதவி செய்தனவோ அந்த ஊர்களுக்கு நான் செய்ய வேண்டிய கடமை உண்டு. எனவே கல்லுப்பட்டி பிர்க்காவிலுள்ள கிராமங்களுக்கு மத்தியில் ஓர் ஸ்தாபனம் அமைத்து அங்கிருந்துகொண்டு என் போன்ற சக ஊழியர்களுடன் சோந்து வேலை செய்ய வேண்டும். இளைஞர்களுக்கு பயிற்சி தர வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

என்னுடைய எண்ணத்தை கல்லுப்பட்டி வட்டாரத்திலுள்ள சில நண்பர்களுக்கு அறிவித்தேன். கொட்டாணிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த நண்பர் திரு நடேசன் செட்டியார் அவர்கள் ஒரு நாள் என்னிடம் வந்து நிரந்தரமான ஒரு நிர்மாண ஸ்தாபனம் அமைப்பதற்கு கல்லுப்பட்டி வட்டாரத்தில் மையமாக அமைந்துள்ள கல்லுப்பட்டி கிராமம்தான் பொருத்தமானது, இங்கு ஆசிரமம் ஆரம்பிப்பதாயிருந்தால் தமது நண்பர் கொட்டாணிபட்டி திரு.ரா.வேலுச் செட்டியார் அவர்கள் தமக்குச் சொந்தமான நிலத்தை இனாமாகத் தருவதற்குச் சித்தமாயிருக்கிறார் என்று சொன்னார். இன்று காந்தி மண்டபம் உள்ள இடமும் அதைச் சுற்றியுள்ள இடமும்தான் அன்பர்கள் நன்கொடையாகத் தந்துதவிய அந்த நிலம். காந்தி மண்டபத்திற்குத் தெற்கேயுள்ளதும், தமக்குச் சொந்தமானதுமான நிலத்தை கல்லுப்பட்டி திரு.மா.கிருஷ்ணன் சேர்வை அவர்கள் இனாமாகக் கொடுத்துதவினார்கள். நான் கேட்காமலேயே இந்தப் பெரியவர்கள் தங்களுடைய சொந்த நிலத்தை இனாமாகக் கொடுக்க

முன்வந்த போது காந்தயடிகளே தம்முடைய நிலத்தைக் கொடுத்து 'என்னுடைய வேலையை நீயும் உன் நண்பர்களும் சேர்ந்து இங்கே ஆரம்பியுங்கள்' என்று சொல்வது போல இருந்தது.

இந்த ஸ்தாபனத்திற்கு என்ன பெயர் வைப்பது? நான் திருச்சி சிறையிலிருந்து வெளிவந்த அன்று நிர்மாண வேலைகள் செய்வதைப் பற்றி எனக்கு ஆலோசனைகள் கூறிய அன்பர் ஸ்ரீ ஜி.ராமச்சந்திரன் அவர்களைக் கேட்டேன். அவர் இட்ட பெயரே ''காந்தி நிகேதனம்'' நான் திருச்சியில் படிக்கும்போது டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன் அவர்களுடைய வீடு தேசீய மாணவர்களும் தேச பக்தர்களும் கூடுவதற்குரிய ஒரு நிலையமாக விளங்கியது. அவருடைய திண்ணிய நெஞ்சமும் தேச பக்தியும் காந்தியடிகளிடத்தில் அவர் கொண்டிருந்த அன்பும் அவர்மீது எனக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்படச் செய்தது. எனவே அவரைக் கொண்டே 1940-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் தேதி அஸ்திவாரக்கல் நாட்டினோம். எந்தவிதப் பணச் செலவும் இல்லாமல் கல்லுப்பட்டி கிராமமும், பக்கத்து கிராமங்களும் செய்த உதவிகள் காரணமாக 45 அடி நீளமும் 40 அடி அகலத்தில் மண் சுவர்களும் நாட்டு ஓடுகளும் கொண்ட ஒரு நல்ல கட்டிடம்-பிரார்த்தனைக்கும் ஊழியர்கள் இருப்பதற்குமாக-உருவாகியது. தமிழ்நாட்டு நிர்மாண ஊழயர்களுக்கு சர்தாராக விளங்கிய வேதாரண்யம் ஸ்ரீவேதரத்தினம் பிள்ளை அவர்கள்திறப்பு விழாவை நடத்து வைத்தார்கள். சர்க்கா சங்க ஊழியர் ஸ்ரீசெல்லச்சாமி அவர்கள் ஆலோசனையின்படி கதர் வேலை ஆரம்பமானது. ஸ்ரீ ரா.வெ.குருசாமி அவர்களும், ஸ்ரீ கதிர்வேல் அவர்களும் தோல் பதனிடும் வேலையைக் கவனித்து வந்தார்கள். ஸ்ரீதவசிநாயுடு அவர்கள் மாஞ்செடிகள் வைப்பதையும், முதியோர் கல்வியையும் கவனித்து வந்தார்கள்.

காந்தி நிகேதனம் ஆரம்பமானது முதல் ஐந்து ஆறு ஆண்டுகள் வேலைகளை கவனிக்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டிருந்தேன். காந்தி நிகேதனத்தின் நோக்கமும் ஆரம்ப ஆண்டுகளில் செய்த வேலை விவரங்களைப் பற்றிய 'அறிக்கையும் வரவு செலவும்' பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை ஆரம்ப காலத்தில் என்னென்ன வேலைகள் எந்த முறையில் ஆரம்பமாயின, அவை எப்படி வளர்ந்தன என்று அறிந்து கொள்வதற்குப் போதுமானது. எனவே அதைப்பற்றி நான் எதுவும் இங்கு அதிகம் கூறத் தேவையில்லை.

1912-ஆம் ஆண்டு இந்த ஸ்தாபனத்திற்கு அப்போதிருந்த அந்நிய சர்க்கார் கொடுத்த சிரமங்கள் கொஞ்சநஞ்சமல்ல. 'இடுக்கண் வருங்கால் நகுக' எனற மறைமொழிக்கு ஏற்ப இங்கிருந்த ஊழியர்கள் நடந்து கொண்டார்கள். 1942 செப்டம்பரில் நான் கைது செய்யப்பட்டேன். ஆசிரம வேலைகளுக்கே தடை ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் ஆசிரம ஊழியர் திரு.தவசி நாயுடு அவர்களும் என்னுடைய வாழ்க்கைத் துணைவி ஸ்ரீமதி மீனாட்சியம்மாளும் ஆசிரம சொத்துக்களைப் பாதுகாத்துக் கொண்டும் பிரார்த்தனை முதலிய அன்றாட அலுவல்களை இங்கிருந்த சில ஊழியர்களின் உதவி கொண்டு செய்தும் வந்தார்கள். இது ஒரு சோதனைக் காலம் என்றே சொல்லலாம்.

1944-ம் ஆண்டு நான் சிறையிலிருந்து வெளி வந்த பின்னர் இங்கு நடைபெற்று வந்த வேலைகள் புத்துயிர் பெற்றதுடன் புதிய சில வேலைகளும் ஆரம்பமாயின. அவற்றில் குறிப்பிடத் தக்கது. தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஜில்லாக்களிலிருந்தும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக 60 ஊழியர்களுக்கு 3 மாதப் பயிற்சி நடத்தவும், அந்தப் பயிற்சியை நிர்மாண வேலையில் ஈடுபட்டிருந்த தலைவர்களும் ஊழியர்களும் நடத்தியதுமாகும். அந்தச் சமயத்தில்தான் திரு.ரா.குருசாமி அவர்கள் காந்தி நிகேதனத்திற்கு வந்து சேர்ந்து, இதன் வேலைகளில் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டார்.

1946-ல் காந்தியடிகள் சென்னைக்கு தென்னிந்திய நிர்மாண ஊழியர்கள் மகாநாட்டிற்காகவும், தட்சிண பாரத ஹிந்தி பிரசார விழாவிற்காகவும் வந்து, ஹிந்தி பிரசார சபையில் பத்து தினங்கள் தங்கி தினந்தோறும் மாலையில் நடத்திய பிரார்த்தனைக் கூட்டங்களும், அவற்றிற்கு மக்கள் திரண்டு வந்து கலந்து கொண்டதும், காந்தியடிகளிடம் தமிழ்நாட்டு மக்களுக்குள்ள பக்தியை எடுத்துக் காட்டியதுடன் தமிழ் நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய உன்னத நிகழ்ச்சியாகும்.

காந்தியடிகளைத் தரிசிப்பதற்காக, நானும் என் மனைவி மீனாட்சியும் சென்றிருந்த போது காந்தி நிகேதனத்தில் தயாரிக்கப்பட்ட ஒரு பேனா- இது மாட்டுக் கொம்பில் தயாரிக்கப்பட்டது, ஒரு க்ஷவரக்கத்தி, மூக்குக் கண்ணாடி பிரேம் ஒன்றும், கதர்ப் பீஸ் ஒன்றும் கொண்டு போயிருந்தோம். அடிகளிடம் ஆசிரமத்தில் நடைபெறும் வேலைகளை விளக்கியபின், நாங்கள் கொண்டு போயிருந்த சிறு காணிக்கையை சமர்ப்பித்தோம். காந்தியடிகள் அவற்றில் க்ஷவரக் கத்தியை எடுத்துச் சற்றுநேரம் உற்றுப் பார்த்துவிட்டு ''இதனால் க்ஷவரம் செய்து பார்ப்பேன். சரியாக வேலை செய்யவில்லையென்றால்

காய்கறிகள் நறுக்குவதற்கு உபயோகப்படுத்துவேன், ஆட்சேபமில்லையே?'' என்று கேட்டுவிட்டு வாய்விட்டுச் சிரித்தார். மற்ற பொருள்களைத் தம்முடன் வந்திருந்தவர்களுடைய உபயோகத்துக்குக் கொடுத்து விடப் போவதாய் அறிவித்தார்.

அடுத்த வாரம் காந்தியடிகள் மதுரை வருவதாக ஏற்பாடாகியிருந்தது. இதை அவரிடம் நினைவுபடுத்தி, காந்தி நிகேதனம் அமைந்துள்ள கல்லுப்பட்டி மதுரையிலிருந்து இருபத்திநாலு மைல்கள் தான் உள்ளது. அங்கு செல்ல ஒரு மணி நேரத்திற்கு அதிகமாகாது. ஆகவே விஜயம் செய்யுமாறு வேண்டினேன். காந்தியடிகள் சிரித்துக் கொண்டே, ''உன்னைப் போன்ற வாலிபனுக்கு ஒரு மணி நேரம் காரில் செல்வது சந்தோஷமாக இருக்கும். நான் அங்கு வந்து நடைபெறும் வேலைகளைக் கண்டு ஆசிர்வதிக்க வேண்டுமென்பதுதானே உன்னுடைய ஆசை! எங்கெல்லாம் நிர்மாண வேலைகள் நடைபெறுகின்றனவோ அந்த ஸ்தாபனங்களுக்கு என்னுடைய ஆசி எப்போதும் உண்டு. என் பெயரால் நடைபெறும் காந்தி நிகேதன ஆசிரமத்திற்கு நிச்சயமாக என் ஆசிகள் உண்டு. இப்போது திருப்திதானே!'' என்று சொல்லிவிட்டு அவர் பார்த்த அந்த அருள் நிறைந்த பார்வை ஆசிரமத்திற்கு ஆசி மழை பொழிவது போலவே எனக்குத் தோன்றியது. ஆன்று முதல் என் உள்ளத்தில் காந்தி நிகேதனம் காந்தியடிகளுடைய ஆசிபலம் பெற்ற ஊழியர் நிலையம் என்ற எண்ணம் இருந்து வருகிறது. அடிகளுடைய ஆசி பலத்தால் தான் சென்ற 25 ஆண்டுகளாக காந்தி நிகேதனம் வளர்ந்து வருகிறது. அங்குள்ள ஊழியர்கள் ஒரு நிமித்த மாத்திரமே என்ற இந்த நினைவு என் மனதில் ஆண்டுதோறும் வளர்ந்து பெருகி வருகிறது.

1947-ஆம் ஆண்டு சுயராஜ்ய சர்க்காரில் முதன் மந்திரியாக இருந்த திரு.ஓ.பி.இராமசாமி ரெட்டியார் அவர்கள் என்னை அரசாங்கத்தில் சேர்ந்து கிராம நிர்மாண வேலை செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி கேட்ட பொழுது ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. நான் அரசாங்க வேலைக்குச் சென்றால் இந்த ஸ்தாபனத்தைக் கவனிப்பது யார் என்ற எண்ணம் எனக்குக் கொஞ்சங்கூட ஏற்படாமல் இருப்பதற்குக் காரணமாக இருந்தவர் திரு.ரா.குருசாமி அவர்கள். அவர்கள் அன்று முதல் இன்று வரை இந்த ஸ்தாபனத்தின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாயிருந்து உழைத்து வருவது தமிழ் நாடு அறிந்ததே.